ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2477/35 - 2026 පෙබරවාරි මස 25 වැනි බදාදා - 2026.02.25
2477/35 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

### கௌரவ சனாதிபதியின் பிரகடனம்

(முத்திரை)

அநுர குமார திசாநாயக்க.

நலம் பெறுக!

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியும், அரசின் தலைவரும், நிறைவேற்றுத்துறையினதும் அரசாங்கத்தினதும் தலைவரும், படைக்கலந் தாங்கிய படைகளின் தளபதியுமான அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், அனைவரையும் வாழ்த்தி இத்தால் அறியத் தருகின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் விமானப்படையைச் சேர்ந்த நிரந்தர மற்றும் தொண்டர் படையணிகளில் பணியாற்றும் அனைத்து தரங்களையும் சேர்ந்த பதவிகளை வகிப்போருக்கும், விமானப்படையில் இணைப்புச் செய்யப்பட்டுள்ள இலங்கை விமானப்படையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குரிய சிவில் பணியாளர்களுக்கும், விமானப்படையின் 75 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு நினைவுப் பதக்கமொன்றை வழங்குவது எனது அபிலாஷை என்பதாலும்,

இதன் முதற்கொண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் விமானப்படையின் இப்பதக்கத்தினைப் பெறுவதற்குரிய தகைமைகளைக் கொண்ட அனைத்து தரங்களை சேர்ந்தவர்களுக்கும், அவர்களால் பெரிதும் போற்றப்படும் புதிய பதக்கமொன்றைத் தாபித்து, உருவாக்கி, வடிவமைப்பதில் நான் மகிழ்ச்சியும் விருப்பமும் கொண்டுள்ளதாலும்,

இதன் முதற்கொண்டு இப்பதக்கத்தினை நிர்வகிப்பதற்காக இதன்பின்னர் மீற முடியாதவாறு பேணப்பட வேண்டிய பின்வரும் விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் நான் இவ்வாறு வகுத்து விதித்தமைத்து நிறுவுகின்றேன்.

1A - G 46356 — 04 (2026/02)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**முதலாவதாக:**

**பெயர் சூட்டலும் அறிமுகமும் -** இப்பதக்கம் "**விமானப்படையின் 75 ஆவது ஆண்டு பூர்த்தி நினைவுப் பதக்கம்**" எனப் பெயர் சூட்டப்பட்டு அழைக்கப்பட வேண்டுமென விதிக்கப்படுகின்றது.

**இரண்டாவதாக:**

**விபரம் -** இலங்கை விமானப்படையானது, அதன் தலைவரான விமானப்படைத் தளபதியுடன் இணைந்து பதவிநிலைப் பிரதானி, பிரதிப் பதவிநிலைப் பிரதானி, பணிப்பாளர் நாயகங்கள், பணிப்பாளர்கள், பீடாதிபதிகள், தள முகாம் கட்டளையிடல் அதிகாரிகள் மற்றும் முகாம் கட்டளையிடல் அதிகாரிகள் ஆகியோரின் ஆதரவுடன் போரின் 10 கோட்பாடுகளுக்கு இணங்க, எதிரிக்கு எதிராகப் போரிடுவதன் மூலம் இலங்கையின் இறையாண்மையைப் பாதுகாப்பதைக் குறிக்கும் வகையில் இப்பதக்கமானது கப்ரோனிகல் உலோகத்தினால் வடிவமைக்கப்பட வேண்டும் என்பதுடன், 75 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதைக் குறிக்கும் வகையில் அதன் முற்பக்க மையத்தில் 75 என்ற எண்ணையும், அதற்கு மேலே விமானப்படையின் குறிக்கோளான "சுரகிமு லகம்பர" என்பதும் கீழே "இலங்கை விமானப்படை" என்பதையும் கொண்டிருத்தல் வேண்டும். 75 என்ற எண்ணின் வலது புறத்தில், மூன்று பறக்கும் விமானங்கள் மூலம் விமானப்படையின் போர் சக்தி மற்றும் போக்குவரத்துத் திறன் ஆகியவற்றை குறித்துக் காட்டும் வகையில் விமானப்படைக்கு சொந்தமான ஒரு போர் விமானமும் இறக்கைகளை கொண்ட ஒரு விமானமும் ஒரு உலங்குவானூர்தியும் சித்தரிக்கப்பட வேண்டும். இந்தப் பதக்கம் அதன் பின்புற மையத்தில் விமானப்படையின் இலட்சினையினையும், அதற்கு இடதுபுறத்தில் விமானப்படை நிறுவப்பட்ட ஆண்டை குறிக்கும் வகையில் "1951" என்பதையும், வலதுபுறத்தில் 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவை குறிக்கும் வகையில் "2026" என்பதையும், விமானப்படையின் இலட்சினைக்கு மேலே சிங்களத்திலும் விமானப்படையின் இலட்சினைக்கு கீழே தமிழிலும் "இலங்கை விமானப்படை" என்ற வாசகங்களையும் இலட்சினையின் வெளிப்புறத்தில் இலங்கை விமானப்படை கல்லூரி மற்றும் தள முகாம்களைக் குறிக்கின்ற நீலோற்பல மலர் இதழ்களையும், அந்த இதழ்களினுள் இலங்கை விமானப்படையின் பதினேழு (17) முகாம்களை குறிக்கின்ற முக்கோண வடிவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**மூன்றாவதாக:**

**பட்டி –** பதக்கத்தின் பட்டியானது 30 மி.மீ. நீளமும் 10 மி.மீ. அகலமும் கொண்டதாக இருக்க வேண்டுமென்பதுடன் ஒன்பது கோடுகளை கொண்டிருத்தல் வேண்டும். இடமிருந்து வலமாக முறையே மஞ்சள், பழுப்பு, அடர்பச்சை மற்றும் செம்மஞ்சள் நிறங்களைக் கொண்ட நான்கு சமமான கோடுகளையும், வெளிர்நீல நிறத்தைக் கொண்ட நடுக் கோட்டையும், மீண்டும் முதல் நான்கு கோடுகளின் எதிர்பக்கத்திலிருந்து முறையே செம்மஞ்சள், அடர்பச்சை, பழுப்பு மற்றும் இறுதியாக மஞ்சள் கோட்டையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**நான்காவதாக:**

**தகைமை –** இந்தப் பதக்கமானது இரண்டாயிரத்து இருபத்தாறாம் ஆண்டு மார்ச் மாதம் இரண்டாம் திகதியன்று உள்ளவாறு இலங்கை விமானப்படையில் முனைப்புடன் பணியாற்றுகின்ற தகுதியான, விசுவாசமான மற்றும் களங்கமற்ற சேவையை வழங்கிய இலங்கை விமானப்படையின் அனைத்து சேவைப் பணியாளர்களுக்கும் நிரந்தர சிவில் சேவை பணியாளர்களுக்கும் அனைத்து பயிலிளவல் அதிகாரிகளுக்கும் மாணவ அதிகாரிகளுக்கும் பயிலுநர்களுக்கும் (அதிகாரவாணைக்கு நியமிக்கப்பட்ட பின்னர் / சித்திப்பெற்று வெளியேறிய பின்னர் பதக்கத்தை அணிவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும்.) இங்கு இதனகத்துப் பின்னர் வகுத்துக் குறிப்பிட்டுக் காட்டும் ஒழுங்குவிதிகளின்படியான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பிரகாரம், இப்பதக்கத்தைப் பெறத்தகுதியானவர்கள் என விமானப்படைத் தளபதியால் பரிந்துரைக்கப்படுகின்ற சகல நபர்களுக்கும் இப்பதக்கம் வழங்கப்பட வேண்டுமென விதிக்கப்படுகின்றது.

**ஐந்தாவதாக**:

**பதிவு -** இப்பதக்கம் வழங்கப்படுகின்ற அனைவரினதும் பெயர்கள், இலங்கை விமானப்படை சேவை கட்டளைகளில் வெளியிடப்படுதல் வேண்டுமெனவும், அத்தகைய பதிவேடுகள் அந்தந்த சேவைத் தளபதிகளின் பணிப்பின் கீழ் பேணப்படுதல் வேண்டுமெனவும் விதிக்கப்படுகின்றது.

**ஆறாவதாக**:

**அணியும் ஒழுங்குவரிசை –** நன்மதிப்புச் சின்னங்கள் மற்றும் பதக்கங்களை அணிய வேண்டிய ஒழுங்குவரிசையைக் காட்டும் உத்தியோகபூர்வ ஏட்டில், விசேட தினத்தைக் கொண்டாடும் வகையில் வழங்கப்பட்டுள்ள, இலங்கைக் குடியரசின்

விமானப்படையின் பொன்விழா நினைவுப் பதக்கத்திற்கு உடன் முன்னராக விமானப்படையின் 75 ஆவது ஆண்டு பூர்த்தி நினைவுப் பதக்கம் அணியப்படுதல் வேண்டுமென விதிக்கப்படுகின்றது.

**ஏழாவதாக:**

**சிற்றுருவ அமைப்புகள்** - பதக்கங்கள் வழங்கப்பெற்றவர்கள் சில சந்தர்ப்பங்களில் அணிந்து கொள்ளக்கூடியதும், சிற்றுருவ நன்மதிப்புச் சின்னம் என அழைக்கப்படுவதுமான, சிற்றுருவ பதக்கத்தின் அளவு அண்ணளவாக, வழங்கப்பட்ட பதக்கத்தின் அரைவாசி அளவுடையதாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அச்சிற்றுருவ நன்மதிப்புச் சின்னத்தின் முத்திரை பொறிக்கப்பட்ட மாதிரியொன்று, விமானப்படை தலைமையகத்தில் வைக்கப்பட்டு பேணப்படுதல் வேண்டுமெனவும் விதிக்கப்படுகின்றது.

**எட்டாவதாக:**

**பறிமுதல் செய்தலும் மீளளித்தலும்** - இங்கு இதனகத்துப் பின்னர் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளின் கீழ், எவரேனும் ஒருவருக்கு அளிக்கப்பட்ட பதக்கமொன்றை வறிதாக்கி நிராகரிப்பதற்கான அதிகாரம் மற்றும் அவ்வாறு வறிதாக்கப்படும் பதக்கமொன்றை மீண்டும் செல்லுபடியாகும் விதத்தில் அளிப்பதற்கான அதிகாரம் கௌரவ சனாதிபதி என்ற வகையில் எனக்கு உண்டு என விதிக்கப்படுகின்றது. மேலும், அவ்வாறு அளிக்கப்பட்ட பதக்கமொன்றை வறிதாக்குதல் அல்லது மீளளித்தல் இடம்பெறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அது தொடர்பாக விமானப்படை சேவைக் கட்டளைகளில் வெளியிடப்படுதல் வேண்டும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரச இலட்சினையின் கீழ், இரண்டாயிரத்து இருபத்தாறாம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி சனாதிபதி அலுவலத்தில் வழங்கப்பட்டது.

கௌரவ சனாதிபதியின் ஆணைப்படி,

**கலாநிதி என்.எஸ். குமாநாயக்க,**
சனாதிபதியின் செயலாளர்.

## விமானப்படையின் 75 ஆவது ஆண்டு பூர்த்தி நினைவுப் பதக்கம்

சனாதிபதி ஆணைச்சீட்டில் விதிக்கப்பெற்ற ஏற்பாடுகளை விளக்கமான வகையில் இலங்கை குடியரசின் விமானப்படையின் 75 ஆவது ஆண்டு பூர்த்தி நினைவுப் பதக்கம் வழங்குதல், வறிதாக்குதல், மீளளித்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற விடயங்கள் தொடர்பாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கௌரவ சனாதிபதி அவர்களினால் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

கௌரவ சனாதிபதியின் ஆணைப்படி,

**கலாநிதி என்.எஸ். குமாநாயக்க,**
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு - 01
2026 பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி.

## விமானப்படையின் 75 ஆவது ஆண்டு பூர்த்தி நினைவுப் பதக்கம் தொடர்பான ஒழுங்குவிதிகள்

1. இரண்டாயிரத்து இருபத்தாறாம் ஆண்டு மார்ச் மாதம் இரண்டாம் திகதியன்று உள்ளவாறு இலங்கை விமானப்படையில் முனைப்புடன் பணியாற்றுகின்ற தகுதியான, விசுவாசமான மற்றும் களங்கமற்ற சேவையை வழங்கிய இலங்கை விமானப்படையின் அனைத்து சேவைப் பணியாளர்களும் நிரந்தர சிவில் சேவை பணியாளர்களும் அனைத்து பயிலிளவல் அதிகாரிகளும் மாணவ அதிகாரிகளும் பயிலுநர்களும் (அதிகாரவாணைக்கு நியமிக்கப்பட்ட பின்னர் / சித்திப்பெற்று வெளியேறிய பின்னர் பதக்கத்தை அணிவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும்.) இங்கு இதனகத்துப் பின்னர் வகுத்துக் குறிப்பிட்டுக் காட்டும் ஒழுங்குவிதிகளின்படியான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பிரகாரம், இப்பதக்கத்தைப்

பெறத்தகுதியானவர்கள் என விமானப்படைத் தளபதியால் பரிந்துரைக்கப்படுகின்ற சகல நபர்களும் இப்பதக்கத்தைப் பெறத் தகுதியுடையோராவர்.

2. பின்வருவோர் இந்தப் பதக்கம் பெறத் தகுதியற்றவராவார்கள்.

(அ) 2026 மார்ச் மாதம் 01 ஆம் திகதிக்கு விடுமுறை பெற்றுக்கொள்ளாது சேவைக்கு சமுகமளிக்காதவர்கள் அல்லது சேவையிலிருந்து தப்பியோடிய நபர்கள்

(ஆ) 2026 மார்ச் மாதம் 01 ஆம் திகதிக்கு தாமாக தங்களுக்கு உடற்காயங்களை ஏற்படுத்திக் கொண்டவர்கள் அல்லது தற்கொலைக்கு முயன்றவர்கள் அல்லது வேண்டுமென்றே கடமைகளைத் தட்டிக் கழித்தவர்கள்.

3. ஒவ்வொரு பரிந்துரையுடனும், பரிந்துரைக்கப்படுபவர்களின் இலக்கம், பதவி மற்றும் முழுப்பெயர் ஆகிய விபரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. பதக்கம் வழங்கப்பட்டோரின் பெயர்கள், விமானப்படை சேவைக் கட்டளைகளில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், இப் பதக்கம் பெறுநர்கள் அனைவரினதும் பெயர்ப்பட்டியல்கள் விமானப்படைத் தளபதியின் பணிப்பின் கீழ் பேணப்படுதல் வேண்டும்.

5. பதக்கம் அளிக்கப்பட்டிருந்தபோது விமானப்படையிலிருந்து அபகீர்த்தியுடன் சேவையிலிருந்து வெளியேற்றப்படும், அவமானத்துடன் விலக்கப்படும், அகற்றப்படும் அல்லது அதிகாரவாணையிலிருந்து இராஜினாமாச் செய்வதற்கு அல்லது ஓய்வு பெறுவதற்கு பணிக்கப்படும் விமானப்படையைச் சேர்ந்த ஒவ்வொரு நபருக்கும், கௌரவ சனாதிபதியவர்களால் வேறுவிதமான உத்தரவு பிறப்பிக்கப்படாத வரை அவருக்கு அளிக்கப்பட்ட பதக்கம் இழக்கப்படுதல் வேண்டும்.

6. எவரேனும் ஒருவருக்கு இப்பதக்கம் அளிக்கப்பட்டிருந்தபோது, அரச துரோகம், அரச பிரிவினை, கலகங்கள், கோழைத்தனம், இயற்கைக்கு மாறுபட்ட விதத்தில் அவமானமுடைய நடத்தை போன்ற ஒரு குற்றத்திற்கு குற்றவாளியாக்கப்பட்டிருப்பின், அல்லது ஒழுக்கக்கேடான விடயங்கள் காரணமாக சேவையிலிருந்து நீக்கப்பட்டிருப்பின் அல்லது விமானப்படை சட்டத்திற்கு ஆட்படுத்தப்பட்டிருக்கையில் சிவில் அதிகாரிகளால் குற்றத்தீர்ப்பு அளிக்கப்படின், அந்த நபருக்கு கௌரவ சனாதிபதியவர்களால் வேறுவிதமாக கட்டளை பிறப்பிக்கப்பட்டாலன்றி, அவருக்கு அளிக்கப்பட்ட பதக்கம் இழக்கப்படுதல் வேண்டும்.

7. எவரேனுமொருவரால் இழக்கப்பட்ட பதக்கத்தை, தனது தற்றுணிபுக்கு அமைய மீளளிப்பதற்கு சனாதிபதி அவர்களுக்கு முடியும்.

8. இழக்கச் செய்தல் அல்லது மீளளித்தல் இடம்பெறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அது தொடர்பான அறிவித்தலொன்று விமானப்படை சேவை கட்டளைகளில் வெளியிடப்படுதல் வேண்டும்.

9. எவரேனுமோர் உத்தியோகத்தர் ஒருவர், விமானப்படை வீரரொருவர் அல்லது சிவில் பணியாளரொருவர், தனது தொலைந்த பதக்கத்துக்குப் பதிலாக வேறொரு பதக்கத்தைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பாராயின், அவ் உத்தியோகத்தர், விமானப்படை வீரர் அல்லது சிவில் பணியாளர் அப் பதக்கம் தொலைந்து போன விதம் பற்றிய வாக்குமூலமொன்றை கட்டளையிடும் அதிகாரியிடம்/ உயர் அதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அதன் பின்னர், அந்த வாக்குமூலத்தை உரியமுறையில் கௌரவ சனாதிபதி அவர்களிடம் சமர்ப்பித்தல் வேண்டும். பதக்கம் தொலைந்தமை தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் திருப்திகரமானவை என ஏற்றுக்கொள்ளப்பட்டால், தொலைந்த பதக்கத்திற்குப் பதிலாக வேறொரு பதக்கத்தை, உரிய தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.

10. இலங்கை விமானப்படைத் தலைமையகம் தொலைந்துபோதல், இழக்கச்செய்யப்படுதல் மற்றும் மீள் நிறுவுதல் இடம்பெற்ற அனைத்து சந்தர்ப்பங்கள் தொடர்பான விடயங்களையும் பதிவு செய்து பேணுதல் வேண்டும்.

11. இவ்வொழுங்குவிதிகளில் -

(அ) 'விமானப்படை' எனும் பதம் - இலங்கை விமானப்படை

என்பதைக் குறிக்கும் என்பதைக் கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

## விமானப்படையின் 75 ஆவது ஆண்டு பூர்த்தி நினைவுப் பதக்கம்

முன்பக்கம்




பின்பக்கம்




பட்டி



EOG 02 - 0210